**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.387/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : ராஜேந்திரன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : முனியசாமி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவரங்கத்தில் குடியிருந்து பிளம்பர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் திருவரங்கம் காலனி அருகே உள்ள கடைக்கு நானும், எனது மகன் சத்தியப்பிரியன் என்பவரும் சென்று நின்று பேசிக்கொண்டிருந்தபோது தெருவில் சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் நாங்கள் கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டோம். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 20.10.2025ம் தேதி மாலை 05.00 மணிக்கு என் மகன் 1வது எதிரியின் கடைக்கு சென்று பட்டாசு கேட்டபோது எதிரி பட்டாசு விலையை உயர்த்தி கூறியதால் ஏன் இவ்வாறு அதிகமாக விலை சொல்கிறீர்கள் என்று எனது மகன் எதிரியிடம் கேட்டபோது 1ம் எதிரியானவர் அப்படித்தான் விற்பேன் இஷ்டம் இருந்தால் வாங்கிக்கொள் என்று சொன்னதால் என் மகன் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றாலும், அதன்பின்பு இரவு 07.00 மணியளவில் ஆஜர் எதிரிகளை அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்த எனது மகனை எதிரிகள் ஆபாசமாக பேசி தாக்கி காயப்படுத்தினார்கள் என்றாலும், நான் வெளியே வந்து தடுக்க வந்தபோது எதிரிகள் என்னையும் ஆபாசமாக பேசி தாக்கி காயப்படுத்தினார்கள் என்றாலும், நாங்கள் இருவரும் சத்தம்போடவும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வருவதை பார்த்த எதிரிகள் எங்களை கொலைமிரட்டல் விடுத்து சென்றதாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.387/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : சத்தியபிரியன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ராஜேந்திரன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவரங்கத்தில் குடியிருந்து ஜெசிபி இயந்திரம் ஓட்டும் வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது தகப்பனார் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் திருவரங்கம் காலனி அருகே உள்ள கடைக்கு நானும், அசா.1 ம் சென்று நின்று பேசிக்கொண்டிருந்தபோது தெருவில் சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் நாங்கள் கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டோம். நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடமும், எனது அப்பாவிடமும் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 20.10.2025 ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான் 1 வது எதிரியின் கடைக்கு சென்று பட்டாசு கேட்டபோது எதிரி பட்டாசு விலையை உயர்த்தி கூறியதால் ஏன் இவ்வாறு அதிகமாக விலை சொல்கிறீர்கள் என்று நான் எதிரியிடம் கேட்டபோது 1 ம் எதிரியானவர் அப்படித்தான் விற்பேன் இஷ்டம் இருந்தால் வாங்கிக்கொள் என்று சொன்னதால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றாலும், அதன்பின்பு இரவு 07.00 மணியளவில் ஆஜர் எதிரிகளை அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்த என்னை எதிரிகள் ஆபாசமாக பேசி தாக்கி காயப்படுத்தினார்கள் என்றாலும், எனது அப்பா வெளியே வந்து தடுக்க வந்தபோது எதிரிகள் அவரையும் ஆபாசமாக பேசி தாக்கி காயப்படுத்தினார்கள் என்றாலும், நாங்கள் இருவரும் சத்தம்போடவும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வருவதை பார்த்த எதிரிகள் எங்களை கொலைமிரட்டல் விடுத்து சென்றதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.